சம 252

மாமாங்க விநாயகர்

திருப்பெருந்துறை முருகன்

# காவடிச்சிந்து



52

பாடியவர் :

புலவர் ந. பூபாலபிள்ளை

பாரதி கொலனி - சின்ன ஊறணி,

மட்டக்களப்பு.

2232

ஆ 252

## மாமாங்க விநாயகர்
## திருப்பெருந்துறை முருகன்

# காவடிச் சிந்து

பாடியவர் :

**புலவர் ந. பூபாலபிள்ளை**

நூலக சுற்றகம்
யாழ். / கனகரத்தினம்
ம. ம. வி.
யாழ்ப்பாணம்

பாரதி கொலனி - சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.
1995

2232

## பதிப்புத் தரவுகள்

| | | |
|---|---|---|
| நூல் | : | காவடிச் சிந்து. |
| வகை | : | காவடிச் சிந்து. |
| ஆசிரியர் | : | புலவர் ந. பூபாலபிள்ளை. |
| வெளியீடு | : | புலவர் ந. பூபாலபிள்ளை. |
| அச்சகம் | : | புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு. |
| வெளியீட்டுத் தேதி | : | 01-08-1995. |
| பிரதிகள் | : | 500. |
| முகவரி | : | பாரதி கொலனி - சின்ன ஊறணி, மட்டக்களப்பு. |
| அட்டை | : | "அருள்" |
| விலை | : | ரூ. 15/- |

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Title | : | Kavadichinthu. |
| Category | : | Kavadipadal. |
| Author | : | Pulavar N. Poopalapillai. |
| Publisher | : | Pulavar N. Poopalapillai. |
| Printer | : | St. Joseph's Catholic Press. Batticaloa. |
| Date of Publication | : | 01-08-1995. |
| No of Copies | : | 500. |
| Address | : | Bharathi Colony - Sinna Urani, Batticaloa. |
| Cover | : | "Arul" |
| Price | : | Rs. 15/- |

வாழ்த்துரை - 1

## இயற்கவி

பூபாலபிள்ளை அவர்களால் நாட்டு நிலைமைதனைப் படம் பிடித்துக் காட்டும் குயமிப் பாடல் திரட்டினை வாசித்ததோடு மட்டுமின்றி கவிஞரின் வாயாலே பாடக் கேட்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்தது.

அவரது கும்மி இற்றைக்குக் கடந்த அறுபதுகளில் கிழக்கில் எழுந்த கிளர்ச்சியையும், இன்றைய மக்களின் மனவெழுச்சியை யும் சிந்திக்கவைத்தது.

அழகிய தமிழ் வர்ணங்களைத் தம் உள்ளத்திலிருந்து உணர்ச்சி யோடு வடித்தெடுத்த நமது கவிஞன் பூபாலபிள்ளை மட்டக்களப்பு மண்ணுக்குக் கிடைத்த மாபெரும் சொத்து, விலைமதிக்கமுடியாத முத்து. அவரது நூல்கள் வருங்கால தமிழகத்து வரலாறாக அமை யும் என்பது என நம்பிக்கை.

இப்போது அவரது காவடிச்சிந்துப் பாடல்கள் ஒரு சிறு நூலாக வெளிவருகின்றது. அன்பர்கள் இதை ஆதரிக்கவேண்டும்.

ஜெயந்திபுரம்.
11-2-95.

ஜி. ஜெயசிங்கம், ஜே பி.
(முன்னாள் மா. ச. உறுப்பினர்)

---

வாழ்த்துரை - 2

## மனிதநேயம்

கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதியில் ஏற்பட்ட அவல நிலைகளைக் கண்டு உள்ளமுருகி அவ்வவலங்கள் தீரவேண்டுமென்று ஆவலோடு முருகனை நோக்கிப் பாடிய ஒரு கிராமியக் கவிஞனின் கவிகளைப் பார்க்கிறோம்.

உயிர்களையும் உடமைகளையும் இழந்து அவல நிலையில் வாழும் சகோதரர்களின் நிலையைக் கண்டு மனமுருகிப் பாடிய பாடல்களிவை.

மனிதநேயமிக்க இவரது கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை.

ம. சிவநேசராசா.

வாழ்த்துரை - 3

## படிக்காத மேதை

''பாடறியேன் படிப்பறியேன் - பள்ளிக்கூடம் தானறியேன்'' என்ற ஒரு நாடோடிப் பாடல் திரையுலகில் கொடிகட்டிப் பறப்பதை யாவரும் அறிவர். இவ்வாறு ஏடறியா, எழுத்தறியாக் கவிஞர்கள் பலர் அந்தக்காலம் முதல் நாட்டு நடப்புகளைப் பாடல்களாகப் பதிவு செய்துள்ளனர். அவை இன்று நமக்குப் பயன்படுகின்றன.

உதாரணமாக, செட்டிபாளையம் சின்னவப்புலவர், கணபதிப் பிள்ளைப் புலவர் எனும் இரட்டைப் புலவர்கள் தமது காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைப்பற்றிப் பல பாடல்களை இயற்றியுள்ளனர். அவை நூலாகவும் வெளிவந்துள்ளன.

கிராமப்புறங்களில் பாடப்படும் நாட்டுப் பாடல்கள் வாய்மொழி இலக்கியமாகவே வளர்ந்துள்ளன. இவற்றில் இலக்கிய நயம், யாப்பமைதி முதலியன இல்லாமல் இருக்கலாம்; எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் இருக்கலாம். ஆனாலும் அவற்றில் ஒரு சுவை உண்டு. பயன் உண்டு. அவ்வகையில், ஊறணியைச் சேர்ந்த பூபாலபிள்ளைப் புலவர் இயற்றிய சில பாடல்கள் ஒரு சிறு நூலாக வெளிவருகின்றன, பக்திச்சுவை செறிந்த காவடிச் சிந்துப் பாடகள் இவை. இவற்றின் உருவ அமைப்பைப் பொருட்படுத்தாது அவற்றுள் பொதிந்துள்ள ஜீவனை, ஆத்மாவைத் தரிசித்தல் சுவைஞர் கடன் ஆகும்.

த. தங்கேஸ்வரி
கலாச்சார உத்தியோகத்தர்

மட்டக்களப்பு,
23-03-95.

---

## நன்றி உரை

அன்பர்களே, சின்ன-ஊறணியில் வசிக்கும் நல்லதம்பி பூபால பிள்ளையாகிய நான் பல ஆண்டுகளாகப் பல்வேறு ஆலயங்களில் பல பாடல்களைப் பாடியும் அவைகள் நூல் வடிவாக்க வசதியின்மையானதால் அவைகள் இலை மறை காயாகவே இருந்து வந்தன, ஏழையின் நண்பனாகிய ஜி ஜெயசிங்கம் ஜே. பி. ஐயா அவர்களின் விடாமுயற்சியால் சில பாடல்கள் இந்த நூலாக வெளிவருகின்றன. அதற்கு வாழ்த்துரை தந்த, ஜி ஜெயசிங்கம் ஐயா, மற்றும் அன்புமணி ஐயா, ம. சிவநேசராசா ஐயா, கலாசார உத்தியோகத்தர் க. தங்கேஸ்வரிஅம்மா, கவிஞர் திமிலைத்துமிலன் ஐயா ஆகியோருக்கு என் மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ந. பூபாலபிள்ளைப் புலவர்,

சின்ன ஊறணி,
மட்டக்களப்பு,
1-8-95.

# ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் காவடிச் சிந்து

## காப்பு - வெண்பா

மட்டுநகர் மாமாங்க வாழ்பதியில் தானமர்ந்து
அட்டசித்துத் தானளிக்கும் ஐங்கரன்மேல் - இட்டமுடன்
பத்திப்பெருக்கதனால் பாலன்பூபாலபிள்ளை
புத்திமிகு சிந்து சொன்னான் தேர்ந்து.

## காவடிச் சிந்து

1. கடகரியே வேலவர்க்குத் தமையனாகிக்
கருத்தாலே மாங்கனியை வென்ற மூர்த்தி
உடனுறுநல் அடியாரைக் காக்கவென்று
உகந்தமிர்த நதிக் கரையில் அமர்ந்த மூர்த்தி
திடங்கனிந்து அடியார்கள் துதிக்கும்வேளை
தீர்க்கமுடன் உன்பாதம் தெளிவாய்க்காட்ட
நடமிடுநல் உமைமகனே நீநமிப்போ
மாமாங்க விநாயகனே அருள் செய்வாயே!

2. காவடியை இருதோளும் மாறிவைத்துக்
கதைக்கின்ற வாய்தனிலே அலகும் பாய்ச்சிக்
காவடியின் நாற்புறமும் தோகை கட்டிக்
காணரிய வேலதனில் கனியும் குத்தி
மாவடிவாய்த் திருமுள்ளும முதுகில் பாய்ச்சி
மண்டியிட்டாடவே செடில் பிடித்துத்
தீபமுடன் அடியார்கள் துதிக்குபவேளை
மாமாங்க விநாயகனே அருள் செய்வாயே.

3. கிருபையுடன் சகலரையும் காக்கவென்று
கிரிபோலும் ஆனைமுக ரூபமானாய்
உரிமையுறு ரூபமதைக் கண்ணாற் காண
உனை நாடிவருகிறார் கோடா கோடி
வறுமை பெற்ற அடியார்கள் துயரை எல்லாம்
மனது வைத்துக் காப்பதுதன் கடனே அன்றோ
பெருமானே அனுமநதி மேவி வாழும்
மாமாங்க விநாயகனே அருள் செய்வாயே!

4. கீர்த்தியுடன் உன்புகழைப் பாடிவாறோம்
கிருபையுடன் உன்பதியைக் கண்ணாற் காண
பூத்தமலர் போலுன்னைக் காண்பதற்குப்
புண்ணியனே வருந்துகிறோம் கோடா கோடி
வார்த்தை ஒன்றுமுரையாது இருந்திடாமல்
வரியுடைய பெருச்சாளி ஏறிவந்து
மார்க்கமுடன் அடியர் துயர் தீர்க்குமையா
மாமாங்க விநாயகனே அருள் செய்வாயே!

5. குவலயத்தில் அடியார்கள் செய்த பொல்லாக்
குற்றமெல்லாம் பொறுத்துனது குழந்தைபோலே
கவலையின்றி வாழ்ந்திருக்கக் கருணை செய்வாய்
கந்தனுக்கு முன்பிறந்த கணநாதா நீ
அவலமுறு பூனைவாய் எலியைப்போலே
அல்லோல கல்லோல மானேனையா
சவலையுறு வயதினிலே நற்கனிக்கே
தந்தை தாய்வலம் வந்த தம்பிரானே!

6. கூடியே உன்புகழைப் பாடிவாறார்
குழறியே உன்பதியில் வந்து வீழ்வார்
தேடியே உனதருளைக் கண்ணாற் காணத்
தெருக்களிலே அடியார்கள் உருண்டுவாறார்
வாடியே வருகின்ற அடியார் தம்மின்
வல்பிணியை உனதருளால் நீங்கச் செய்வாய்
நாடிவரும் அடியர் துயர் தீர்ப்பாயையா
நற்கனியைப் பெற்றிட்ட ஞானமூர்த்தி.

சம 252

7. கெட்டியாய்த் தினைப்புனத்தின் உள்ளே சென்று
கிருபையுடன் தம்பியர்க்குத் துணையாய் அங்கு
மட்டற்ற வள்ளிதனக் கெதிரே நின்று
மாபெரிய ரூபமாய்க் கரிபோலானாய்
திட்டமுறு ரூபமதைக் கண்டவள்ளி
திடுக்கிட்டு மனம்பதைத்து திருவேலர்க்கே
இட்டமுடன் மணம்புரிய இசையவைத்த
மாமாங்க விநாயகரே அருள் செய்வாயே!

8. கேட்டையுறு நவக்கிரக பிணிதோஷத்தால்
கெட்டலைந்து வருந்தாமல் எம்மைக் காப்பாய்
நாட்டமுடன் உந்தனது சன்னதிக்கே
நல்விரத மனுஷ்டித்து நலிந்துவாடி
வாட்டமது மனதினிலே வந்திடாது
மாவடியை என்முன்னே காட்டவேணும்
சாட்டாங்கமாய் விழுந்து கும்பிட்டேன் நான்
மாமாங்க விநாயகனே அருள் செய்வாயே!

9. கைலைதனில் வாழுகின்ற சங்கமர்க்குக்
கண்டெடுத்த முத்துமணி நீயேயாகும்
கையுறையாய் உந்தனது சன்னதிக்கே
கற்பூர ஆலாத்தி தேன்பாலோடு
கைத்தாள மேளமொடு கீதம்தானும்
கனஓசை வெடிவட்டம் சிறப்பாய்த்தோண
கைவாய் தோள் முதுகினிலே முள்ளுமிட்டுக்
கரம் கூப்பி வருவோர்க்கு அருள்செய்வாயே!

10. கொடிமரத்தில் கொடிபறக்கக் கண்ணாற் கண்டேன்
கோயிலுக்குள் வசந்தமண்டபமும் கண்டேன்
துடியிடையாம் மாதர் பலர் தம்மைக் கண்டேன்
தூபிகளில் பலவர்ண ரூபம் கண்டேன்
நெடிகலக்கும் நத்தியது ரூபம் கண்டேன்
கிருபையுறு வேல்வைர ரூபம் கண்டேன்
முடியதனில் சோதிமயரூபம் கண்டேன்
முன்னுதித்த மாமாங்க முதல்வா போற்றி

11. கோதாரி கோய்பலதும் தீர்க்கும் நாதா
கொம்பற்றை வடிவாகப் போற்றும் நாதா
மாதாவும் பிதாவும்போல் ஆனநீதான்
மாவடிவைக் காட்டிருவம் மாகோலத்தா
பாதாதி கேசம் முழுதுணர்ந்த வேதா
பண்பான முதற்பூசை ஏற்கும் நாதா
போதா நான் உன்புகழைப் பாடுதற்கே
மாமாங்க விநாயகனே அருள்செய்வாயே!

12. கௌவியே பூதமென்னைப் பிடிக்கும்போது
காருமென்று உன்பதிக்கே ஓடிவந்தேன்
ஔவிய எனைச் சூழும்லாடன் மாடன்
உன்நாமம் நினைந்திடவே ஓடிடாதோ
கொவ்வைசனி உன்பதியில் தொண்டர் கூடிக்
கருத்துடனே திருவிழாக்கள் செய்கிறார்கள்
மௌவலஞ்சேர் குழலுமையாள் மகனேநீரும்
மாமாங்க விநாயகனே அருள்செய்வாயே!

13. இக்கணமே உன்புகழைச் சொன்னேனையா
இதோபாருன் சன்னிதியில் திருவிழாவை
வக்கணமாய் உந்தனுக்குப் பாட்டுப்பாடி
வருகிறார் காவடிகள் கொண்டு ஆடி
எக்காளம் பேரிகைதம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
சிக்கெனவே ஆடி அமாவாசை தன்னில்
திருப்தி யுடன் தீர்த்தமிடும் தேவே போற்றி.

# திருப்பெருந்துறை வேலவர் காவடிச்சிந்து

## காப்பு - வெண்பா

மீன்பாடும் தேன்நாடாம் மேன்மையுறு மட்டுநகர்
தான்பாடும் பெரும் துறையாம் பேரூரில் - யான்பாடும்
மாண்புமிகு வடிவேலர் காவடிச் சிந்துதனில்
சேர்ந்தாடும் ஐங்கரனே காப்பு.

## சிந்து

1. பரமனருள் உமைமகனே சக்திபாலா
பழம் பெறவே மயிலேறிப் பறந்த வேலா
கரமதுவே கூப்பி உனை வாழ்த்துகின்றேன்
கருத்தறியாப் பிள்ளைநான் பழனி வேலா
வரமதுவே தவறாது தந்து என்னை
வாக்குப் பிழை இல்லாதே காத்து ஆள்வாய்
சிரமீதில் கரம் ஏந்தி தோத்தரித்தேன்
சீர்பரவும் பெருந்துறைவாழ் தேவே போற்றி

2. பாடுகிறேன் உன்புகழை ஏழை நானும்
பழு தொன்றும் வாராது காத்து ஆள்வாய்
காடுறைந்த நகரமதில் ஐபா நீரும்
கனகாலம் கண்விழியா நின்றதேனோ
மாடுமரை உறைகின்ற வனத்தில் நீ நம்
மனமிரங்கி வெளிப்படவும் காலந்தானோ
நாடகன்ற பெருந்துறைவாழ் ஞானவேலா
நாடிவந்தேன் குறைபோக்கி அருள் செய்வாயே.

3. பித்தனைப்போல் இது வரையும் ஐயா நீரும்
பிசகாது இவ்விடத்திலிருந்து தானே
இத்தனையும் ஆழ்பதியில் அடைத்து வைத்து
இருந்ததுமே ஏதுகுறையாலே ஐயா
அத்தனையும் மனம் பொறுத்து முடியாவண்ணம்
அன்பன் மனோ சரனுக்கே காட்சியீந்தாய்
சித்சமுடன் திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே.

4. பீரங்கி வெடிவாணம் மேளத்தோடு
பேர் பெரிய தேர்தீர்த்தம் ஆடிக்கொண்டு
சோரங்கள் இல்லாமல் ஆண்டு தோறும்
சொகுசாக ஆலயத்திலிருந்து வாழ்ந்தாய்
மார்பொங்கும் வேல் முள்ளுப்பாய்ச்சிக்கொண்டு
மண்டியிட்டு ஆடிவரப்பாட்டுங்கேட்டாய்
பேரிலங்கும் திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே?

5. புனித மென்றே சன்னதியைப் புகழ்ந்து போற்றிப்
புகழ் பூத்த கலைஞர்களின் மரபில் வந்த
வனிதையர்கள் காட்சிபெற வேணுமென்று
வந்தார்கள் கோடான கோடி மக்கள்
மனிதர்களின் பெரும்புகழைச் சேர்க்கவென்று
மனதிலெண்ண வாட்டமுற்று இருந்த தேவா
இனிதான திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே.

6. பூவையர்கள் மலர் சொரிந்து கீதம் பாடப்
புகழான சன்னதியில் இருந்த நீரும்
தாவரங்கள் இல்லாமல் தானுமிப்போ
தற்பரனே சில காலம் வாழ்ந்திருந்தாய்
மாவனத்திலிருக்கிறது தெரியதென்றோ
மானிடர்க்கு உன்செயலைக் காட்டலுற்றாய்
பேரிலங்கும் திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே.

7. பெருந்துயரம் எத்தனைதான் அடைந்தபோதும்
பெருமானே இவ்விடம் விட்டகலா வண்ணம்
வரும் வினைகள் அத்தனையும் தாங்கிக்கொண்டு
வடிவேலா வனம் தனிலே வாழ்ந்திருந்தாய்
அரும் பெரிய ஆலயங்கள் முன்னம் போலே
அவ்விடத்தில் அமர்ந்திருக்கக் கருணை செய்வாய்
பெருமானே திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே:

8. பேர் பெற்ற சூரபத்மன் வதையே செய்த
பெருமைதனை தாய் தந்தை புகழ்ந்தாற்போலே
வேரறுத்து வேல்பிடித்து அட்டதிக்கும்
விளங்கவே உன்செயலைக் காட்டினாற்போல்
ஈராறு பன்னிரண்டு கண்களோடும்
இருமாதை இருபுறமும் தாங்கும் வேலா
சீர்பெறவே திருப்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள்செய்வாயே

9. பைதூக்கி வெண்ணீறு தானுமேந்திப்
பண்டாரம் போல் பழுத்த வேடம் பூண்டு
கைவேலைத் தடியாகத் தானும் மாற்றிக்
கானகத்தில் குறமாதைப்புணர எண்ணி
மைவிழி யாள் வள்ளியிடம் தாகம் தீர்த்துப்
பொய்கைதனில் கைப்பிடித்து இழுத்து நீரும்
சைகைசெய்து ஐங்கரனால் மணம் புரிந்த
சண்முகனே பெருந்துறை வாழ் தங்கவேலே.

10. பொடிப்பொடியாய்க் கோபுரங்கள் தானுடைந்து
பொய்கைகளும் காடுவனம் தானுமாகி
அடிப்படையில் புகழோங்கி வாழ்ந்த நீயும்
அடியர்களால் பாழடைந்தாய் ஆண்டு நூறாய்
கெடிகலக்க விளங்கிய தோர் ஆலயந்தான்
கெட்டுடைத்து போயிடவே மனதிரங்கி
கொடிதுலங்க உன்செயலைக் காட்டுதற்கோ
குடிகொண்டாய் பெரியதுறைக்கோவே போற்றி.


11. போய் மறைந்து நீர் வாழ்ந்த காலம் போச்சே
பொய்கைகளும் திறந்து வைக்க நாளுமாச்சே
பேய்பசாசு தானுறைந்து இருந்த காடும்
பேர்பெற்று விளங்கியதோர் நாடுமாச்சே
நோய்நொடிகள் அணுகாது பக்தர்கட்கு
நொடிப் பொழுதில் உன்செயலைக் காட்டுதற்கோ
தாய்போல பெருந்துறையில் வீற்றிருந்து
தக்கவர்க்கு அருள் புரியும் தங்கவேலே.

12. பௌத்த மதம் கிறிஸ்த மதம் என்று பேசும்
பலபேர்க்கும் காட்சிதரும் கதிரவேலே
களைத்துமே கைகால்கள் சோரும் என்னை
சண்முகனே என்றுனது நாமம் சொல்ல
கயிற்றுடனே எமைச்சூழும் காலன் தன்னைக்
கைவேலால் பொடியாக்கி உயிரைக்காப்பாய்
உகுத்தமலர் கமழ்பெரிய துறையமர்ந்த
சண்முகனே உன்பாதம் அருள் செய்வாயே.

13. வாழ்வார்கள் அந்சணரோ ராகமத்தார்
வாழ்பதியில் சூழலுள்ளார் மக்கள் தாமும்
தொழுவார்கள் உந்தனையே தோத்தரித்துத்
தொண்டுகள் தவறாது செய்து நாளும்
பழுதொன்றும் வாராது பக்தர்கட்குப்
பக்குவமாய் உனதருளைப் புரிந்து காட்டி
அழுமடியார் தொழப்பெரிய துறையமர்ந்த
அப்பனே உன்பாதம் போற்றி போற்றி

நூலகம்
யாழ்./கனகரத்தினம்
ம. ம. வி.
யாழ்ப்பாணம்

2232



## நூலாசிரியர்

மட்டக்களப்பு ஊறணியில் வதியும் புலவர் ந. பூபாலபிள்ளை ஏராளமான பக்திப் பாடல்களையும், சமூக நிகழ்ச்சிப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள எல்லாத் திருத்தலங்கள் மீதும், காவடிச்சிந்து, கும்மி எனப் பல பதிகங்களைப் பாடி வைத்துள்ளார். ஆனால் இவை எதுவும் அச்சில் வெளிவரவில்லை. தற்போது அவர் பாடிய காவடிச் சிந்துப் பாடல்களில், மாமாங்க விநாயகர் திருப்பெருந்துறை முருகன் ஆகிய இரண்டும் அடங்கிய இச் சிறு நூல் வெளிவருகிறது.

அன்பர்கள் இதற்கு முழு ஆதரவு நல்கி இவரை வென்மேலும் ஊக்குவிப்பது அவசியம்.

— மணி.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

# யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

இப்புத்தகம் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... |

| பகுப்பு எண் | சேர்வு இல |
|---|---|
| | |